2026 GROUP IV TEST – 2
General Tamil Explanations

1. **விடை : A**
   - ‘அ’ என்னும் எழுத்து மனிதனைக் குறிக்கிறது.
   - ‘அ’ என்னும் எழுத்தின் பின்னால் உள்ள ‘|’ என்னும் முதுகுக்கோடு பழங்காலத்தில் வேட்டை ஆடுவதற்கு மனிதன் முதுகில் சுமந்த **அம்புக்கூட்டைக்** குறிக்கிறது.

2. **விடை : B**
   - ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
   - ஆய்த எழுத்தின் முன் குறிலும், அதன்பின் **வல்லின உயிர்மெய்க் குறிலும்** வரும்.
   - இஃது உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால் ‘தனிநிலை’ என்று அழைக்கப்படுகிறது.
   - ஆய்த எழுத்தை ஒலிக்க அரை மாத்திரை காலஅளவு ஆகும்.

3. **விடை : C**
   - உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது **மார்பு, தலை, கழுத்து, மூக்கு** ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, **இதழ், நாக்கு, பல், மேல்வாய்** ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.

4. **விடை : C**

(சொல்)		**(புணர்ச்சி)**
பொன்னுண்டு (பொன் + உண்டு)	–	மெய்யீற்று புணர்ச்சி
சிலையழகு (சிலை + அழகு)	–	உயிர் முதல் புணர்ச்சி
வாழையிலை (வாழை + இலை)	–	உயிர் முதல் புணர்ச்சி
மட்குடம் (மண் + குடம்)	–	மெய்யீற்றுப் புணர்ச்சி

5. **விடை : B**

(புணர்ச்சி)		**(சொல்)**
உயிர்முன் உயிர்	–	மணியடி
உயிர்முன் மெய்	–	பனிக்காற்று
மெய்ம் முன் உயிர்	–	ஆலிலை
மெய்ம் முன் மெய்	–	மரக்கிளை

6. **விடை : A**
   - குற்றியலுகரம் புணர்ச்சி அல்லாத வேறுபட்ட சொல் ‘**குருவருள்**’ ஆகும்
   - குரு + அருள் = குருவருள் (**உடம்படுமெய் புணர்ச்சி**)

7. **விடை : D**
   - இயல்பு புணர்ச்சி அடிப்படையில் சேர்ந்துள்ள சொல்**:**
     - உடல் + ஓம்பல் = உடலோம்பல் (இங்கு ல் + ஓ இணைந்து லோ என்னும் உயிர்மெய் எழுத்து ஆயிற்று. புதிய எழுத்து எதுவும் தோன்றவோ வேறு எழுத்தாகத் திரியவோ மறையவோ இல்லை)

SHANKAR IAS ACADEMY

8. **விடை : A**

- இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்கள் நிகழுமாயின், அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.
- நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

9. **விடை : C**

உடம்படுமெய் புணர்ச்சி:

- இகர, ஈகார, ஐகார ஈற்றுச் சொல்முன் யகரமும் ஏனைய உயிர்கள் முன் வகரமும், ஏகாரத்தின் முன் யகரமும் வகரமும் ஆகிய இரண்டும் உடம்படுமெய்களாக வரும்.

10. **விடை : C**

தவறாக பிரிந்துள்ள சொல்:

- நாவையசைத்த = நா + அசைத்த அல்ல.
- நாவை + அசைத்த = நாவை + ய்+அசைத்த = நாவையசைத்த(ஐகார ஈறு)

11. **விடை : A**

தவறாக சேர்ந்துள்ள சொல்:

- மா + இலை = மாயிலை அல்ல.
- மாவிலை = மா + **வ்** + இலை = மாவிலை (ஆகார ஈறு)

12. **விடை : D**

- வயிறு + பசி – வயிற்று + பசி = வயிற்றுப்பசி

13. **விடை : C**

பிரித்து எழுதுக:

- பெரியன் = பெருமை + அன்

14. **விடை : C**

- இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது

15. **விடை : B**

சந்திப்பிழையான தொடர்:

- காலம் + கடந்தவன் = காலங்கடந்தவன்

16. **விடை : B**

சந்திப்பிழையான தொடர்:

- **அ, இ, உ** என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் (சுட்டுத்திரிபுகளின்) பின்னும், **எ** என்னும் வினாவெழுத்தின் (வினாத்திரிபு) பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும்
- எந்த + திசை = எந்தத்திசை

SHANKAR IAS ACADEMY

17. **விடை : B**

- தமிழில் நெடில் உயிர்மெய் எழுத்துகள் நூற்று இருபத்தாறு (126) உள்ளன

18. **விடை : B**

(எழுத்துகள்) (மாத்திரை)

- மெய் – அரை
- நெடில் உயிர்மெய் – இரண்டு
- உயிர் நெடில் – இரண்டு
- குறில் உயிர்மெய் – ஒன்று

19. **விடை : D**

- இயல்பாகக் காற்று வெளிப்படும் போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன.
- வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் உயிர் எழுத்துகள் பிறக்கின்றன.

20. **விடை : B**

பிழையான தொடர்: தாய்செய் நலவிடுதி

- தாய்சேய் நலவிடுதி

21. **விடை : A**

- உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும்.
- 'ஐ' என்னும் எழுத்துக்கு 'இ' என்பது இன எழுத்தாகும்.
- சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

22. **விடை : B**

பிழையான சொல்: திண்றான்

- இன எழுத்துகள்: ங்க; ஞ்ச; ண்ட; ந்த; ம்ப; ன்ற
- எனவே, திண்றான் என்பதே பிழையற்ற சொல் ஆகும்.

23. **விடை : D**

- தமிழ் எழுத்துகளில் **ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.**

24. **விடை : B**

ஒருமை/பன்மை அடிப்படையில் பிழையான சொல்: படம்கள்

- 'ம்' என்கிற எழுத்துடன் 'கள்' சேரும்போது 'ங்கள்' ஆக மாறும்.
- படம் + கள் = படங்கள் ('ம்' முன் கள் சேர–ங்கள் ஆகியது)

25. **விடை : C**

- ஓரெழுத்து ஒருமொழியுடன் 'கள்' சேரும் போது 'க்' தோன்றும்

SHANKAR IAS ACADEMY

26. **விடை : B**

பிழையானத் தொடர்: சந்தையில் ஆள்கள் நிறைந்திருந்தனர்

- ‘ள்’ என்கிற எழுத்துடன் ‘கள்’ சேரும் போது ‘ட்கள்’ ஆக மாறும்.
- ஆள் + கள் = ஆட்கள்
- சரியான தொடர்: சந்தையில் ஆட்கள் நிறைந்திருந்தனர்.

27. **விடை : C**

பிழையற்ற தொடர்:

- அங்கே நான்குபேர் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

28. **விடை : C**

- ‘சொல்’ என்பதனைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி ‘ வி ‘ ஆகும்.

29. **விடை : D**

இலக்கணக்குறிப்பு:

- ‘காவியா பூவைத் தொடுத்தாள்’ – சினைப்பெயர்

30. **விடை : C**

பொருட்பெயர் அல்லாத சொல்:

- சதுரவீடு – பண்புப் பெயர்
- பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும். பண்புப்பெயரைப் குணப் பெயர் எனவும் கூறுவர். குணப்பெயர்கள் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

31. **விடை : D**

இலக்கணக்குறிப்பு:

- ‘அன்பகம்’ – இடப்பெயர்
- ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்

32. **விடை : D**

(தொடர்)		**(பெயர்ச்சொல்)**
காவியா மாலையில் விளையாடினாள்	–	தொழிற்பெயர்
காவியா தலையை அசைத்தாள்	–	சினைப்பெயர்
காவியா பள்ளிக்குச் சென்றாள்	–	இடப்பெயர்
காவியா இனிமையாகப் பாடுவாள்	–	பண்புப்பெயர்

33. **விடை : B**

ஒருமை/பன்மை அடிப்படையில் வேறுபட்ட சொல்:

- என்னின் - தன்மை ஒருமைப் பெயர்
- எம்மின்
- நங்கண் } தன்மைப் பன்மைப் பெயர்கள்
- எங்களின்

SHANKAR IAS ACADEMY

34. **விடை : D**

பிழையானத் தொடர்:

- நீங்கள் என்னும் முன்னிலை பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது 'நுங்கள், உங்கள்' என்று மாறுபடும்.

35. **விடை : B**

- முன்னிலைப் பன்மைப் பெயர்: **நுங்களது**

36. **விடை : D**

- 'தான்' என்னும் சொல் நான்காம் வேற்றுமை உருபை ஏற்கும்போது '**தனக்கு**' என மாறுபடும்.

37. **விடை : B**

வேறுபட்ட சொல்: முக்காலி

- முக்காலி என்பது காரணப் பெயர் ஆகும்.
- மரம்
- மாடு
- காடு

} இடுகுறிப்பெயர்

38. **விடை : B**

(சொல்)		**(பெயர்வகை)**
மலை	–	இடுகுறிப் பொதுப்பெயர்
தென்னை	–	இடுகுறிச் சிறப்புப்பெயர்
வளையல்	–	காரணச் சிறப்புப்பெயர்
பறவை	–	காரணப் பொதுப்பெயர்

39. **விடை : D**

இலக்கணக்குறிப்பு:

- அணி – காரணப் பொதுப்பெயர்
- காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது, காரணப்பொதுப்பெயர் எனப்படும்.

40. **விடை : A**

- வினைச்சொல் என்பது செயலையும் காலத்தையும் காட்டும்
- வினைச்சொல் வேற்றுமை உருபை ஏற்காது.

41. **விடை : B**

இலக்கணக்குறிப்பு:

- ஆறும் - சிறப்பும்மை

42. **விடை : B**

இலக்கணக்குறிப்பு:

- வரைந்தான் - தெரிநிலை வினைமுற்று

SHANKAR IAS ACADEMY

43. **விடை : C**

வேர்ச்சொல்:

- விண்டல் - விள்

44. **விடை : B**

- 'அகலப் பொருள் உடையது' எனப்பொருள் தரும் சொல் '**வியல்**' ஆகும்.

45. **விடை : C**

- 'அமர்தல்' என்னும் தொழிற்பெயரின் வேர்ச்சொல் '**அம்**' ஆகும்.

46. **விடை : D**

பிரித்து எழுதுக:

- ஆடமை = ஆடு + அமை

47. **விடை : B**

- 'ஆடமை புரையும் வனப்பில் பணைத்தோள்' என்ற பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் குறுந்தொகை ஆகும்.

48. **விடை : C**

பொருள் தருக:

- அமலை – சோற்று உருண்டை

49. **விடை : C**

- "தென்னக மொழிகளில் தமிழே மூத்தது, முதன்மையானது" என்பதை நிறுவியவர் கால்டுவெல் ஆவார்.

50. **விடை : C**

- சங்க இலக்கியத்தில் மலைநாடு என்பது சாரல்நாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

51. **விடை : C**

- தமிழைத் 'திராவிடத்தாய்' என்று அழைத்தவர் பாவாணர் ஆவார்.

52. **விடை : D**

- புழைக்கடை என்பது நீர் ஒடும் துளையுள்ள இடம் ஆகும்.

53. **விடை : B**

- 'சேரல்' என்னும் சொல் 'சேரலன்' எனத் திரிந்து பின் சகர, ககர மாற்றத்தால் கேரலன் என்று மாறியது.

54. **விடை : A**

- 'புடல் – புடலை – புடலங்காய்' என்னும் தமிழ் வழக்கினை மலையாள மொழி படோல் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது.

SHANKARIAS ACADEMY

55. **விடை : A**

- ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்றுவின் கூற்றுப்படி மேலை இந்தோ ஐரோப்பிய மொழிகளில் 'over' என்பதற்கு 'உபரி' என்பதே வேர்ச்சொல் ஆகும்
- உப்பி மேலெழுந்தது உப்பு; உகப்பி மேலெழுந்தது உக → உகர் → உவர், இவ்'உவர்' மேலெழுதல் பொருளிலும் கூடுதல் பொருளிலும் இந்தோ ஐரோப்பியத்தில் உபர் – உபரியானது.
- எனவே, கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.

56. **விடை : A**

- நிலத்திற்கு அடியில் மரம், செடி, கொடிகளைத் தாங்கி நிற்கும் ஓர் உறுப்பு, மெல்ல மெல்ல வியலித்து வளர்வதால் 'வியல் → வியர் → வேர்' என இச்சொல் உருவானது.
- 'பெயர் → பேர்' என்பது போல் 'வியர் என்பது வேர்' எனத் திரிந்து மாறியுள்ளது.
- ஆங்கிலத்தில் தாவரத்தின் வேருக்கும் மொழியின் மூலச் சொல்லுக்கும் Root என்ற ஒரே சொல்லை பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

57. **விடை : D**

பிரித்து எழுதுக:

- நாடுரி = நாழி + உரி

58. **விடை : B**

பிரித்து எழுதுக:

- கூழாங்கல் = கூழ் + ஆம் + கல்

59. **விடை : A**

(சொல்)		**(எதிர்ச்சொல்)**
இரவலர்	–	புரவலர்
அகழ்தல்	–	தூர்த்தல்
அறம்	–	மறம்
ஒன்னார்	–	உற்றார்

60. **விடை : D**

தவறான இணை:

(சொல்)		**(எதிர்ச்சொல்)**
ஓங்கல்	×	ஒடுங்கல்

61. **விடை : A**

- 'அலர்தல்' என்னும் சொல்லின் சரியான எதிர்ச்சொல் 'குவிதல்' ஆகும்.
- மலர் விரிவதைக் குறிக்கும் 'அலர்தல்' என்ற சொல்லுக்கு நேர்மாறாக, மலர் மூடுவதைக் குறிக்க 'குவிதல்' என்ற சொல் பயன்படுகிறது.
- எனவே, கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி.மேலும் காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது.

SHANKAR IAS ACADEMY

62. **விடை : B**

பிழையற்றத் தொடர்:

- ஒரு மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்.

63. **விடை : D**

- 'விடு' என்னும் துணைவினை உறுதிப் பொருள், கண்டிப்பு, கட்டாயம் ஆகிய பொருள்களைத் தருகிறது.

64. **விடை : B**

- 'கண்ணுங்கருத்துமாக' என்ற மரபுத்தொடர் 'மிகக் கவனமாக' என்னும் பொருளை உணர்த்துகிறது.

65. **விடை : C**

- "அண்ணா, தங்கு தடையின்றிப் பேசும் ஆற்றல் உடையவர்" – இக்கருத்திற்குப் பொருத்தமான உவமைத்தொடர் 'மடை திறந்த வெள்ளம் போல' என்பதாகும்.

66. **விடை : B**

- பகலவனைக் கண்ட பனி போல – மனக்கவலை நீங்குதல்
- கடலில் கரைத்த பெருங்காயம் போல – பயனின்மை
- அனலில் விழுந்த புழுப் போல – மிகுந்த துயரம்
- பசுமரத்தாணி போல – எளிதில் மனதில் பதிதல்

67. **விடை : B**

- இலவு காத்த கிளி போல என்ற உவமைத்தொடர் உணர்த்தும் பொருள் – ஏமாற்றம்
- அவலை நினைத்து உரலை இடித்தாற்போல – கவனக்குறைவு, சிந்தனை மாற்றம்
- கல்லில் நார் உரித்தாற் போல – முடியாத காரியம்
- கரடி பிறை கண்டது போல – மிக அரிது

68. **விடை : A**

- அறிஞர் அண்ணாவின் புகழ் பாரெங்கும் ஒளி வீசுகின்றது என்னும் கருத்திற்கு பொருத்தமான உவமைத் தொடர் – குன்றின் மேலிட்ட விளக்கு போல.

69. **விடை : B**

- பூவுடன் சேர்ந்த நாரும் மணப்பது போல' □ என்ற உவமைத்தொடர் உணர்த்தும் கருத்து நல்லவர்களின் தொடர்பால் சிறப்புப் பெறுதல்.

70. **விடை : B**

- எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
  செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" – இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் நன்னூல்.

71. **விடை : B**

- 'மான்குட்டி' என்பதன் மரபுச்சொல் மான் கன்று

SHANKAR IAS ACADEMY

72. **விடை : B**

- எலிக் குட்டி, தென்னை ஓலை, மான் குட்டி – இவை பிழையான (வழுவான) சொற்களாகும்.
- எலிக் குட்டி என்பதை 'எலிக் குஞ்சு' என்றும் தென்னை ஓலை என்பதைத் 'தென்னங் கீற்று என்றும், மான் குட்டி என்பதை 'மான் கன்று' என்றும் முன்னோர் வழங்கி வந்தனர். இதுவே மரபாகக் கருதப்படுகிறது.
- எனவே, எலிக் குஞ்சு, தென்னங் கீற்று. மான் கன்று என்பவை மரபு பிறழாத சரியான சொற்கள் ஆகும். இவ்வாறு எப்பொருளை, எச்சொல்லால் முன்னோர் வழங்கி வந்தார்களோ. அப்பொருளை அச்சொல்லாலேயே வழங்குவது மரபு எனப்படும்.

73. **விடை : C**

சரியான மரபுத் தொடர் யானைக்கன்று

மரபுப்பிழை		திருத்தம்
கிளிக்குட்டி	–	கிளிப்பிள்ளை
ஆட்டுக்கன்று	–	ஆட்டுக்குட்டி
வாழைக்குட்டி	–	வாழைக்கன்று

74. **விடை : C**

'இளைஞர்கள்' என்பது பலர்பாலைக் குறிக்கிறது.

- பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் ஐந்து பால்களாகப் பிரிக்கிறோம்.
- ஆண்பால் – அவன், அண்ணன்
- பெண்பால் – அவள், அரசி
- பலர்பால் – அவர்கள், இளைஞர்கள்
- ஒன்றன்பால் – அது, குதிரை
- பலவின்பால் – அவை, மாடுகள்

75. **விடை : B**

அவன் வந்தான்

- அவன் – பெயர்ச்சொல்
- வந்தான் – வினைமுற்று

76. **விடை : C**

- 'பெயர் – வினை'
- அவை – வந்தன

77. **விடை : B**

- அஃறிணையில், ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால்.
  - (எ.கா.) கல், பசு.
- ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால்.
  - (எ.கா.) மண் புழுக்கள், பசுக்கள்.

78. **விடை : C**

பிழையற்ற தொடர்

- தோட்டத்தில் பூக்கள் பூத்து இருந்தன.

SHANKAR IAS ACADEMY

79. **விடை : B**

சரியான தொடர்

- இராணியும் வேணியும் வந்தார்கள்.
  - ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால்.
  - பலர்பால் வினைமுற்று விகுதி அர், ஆர்,கள்.

80. **விடை : B**

- தோட்டத்தில் ஒரு பாம்பு ஓடியது.
- அஃறிணையில் எழுவாய் ஒருமையில் வரும்போது து, று ஆகிய ஒன்றன்பால் வினைமுற்று விகுதியைக் கொண்டு முடியவேண்டும்.
- பலவின்பால் வினைமுற்று விகுதி – அ, ஆ

81. **விடை : B**

- இராணி மட்டும் பயமின்றிப் பாம்பை நெருங்கினார்கள்
- இராணி மட்டும் பயமின்றிப் பாம்பை நெருங்கினாள் என்பதே சரி.
- ஒருமை பெண்பால் எழுவாய் ஒருமை பெண்பால் வினைமுற்றைக் கொண்டு முடிய வேண்டும்.
- பெண்பால் வினைமுற்று விகுதிகள் – அள், ஆள்.

82. **விடை : D**

- cellphone என்னும் ஆங்கிலச் சொல்லிற்குக் கைபேசி. செல்லிடப்பேசி, அலைபேசி போன்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன.
- Tele Phone என்னும் சொல்லின் ஆங்கிலச் சொல் தொலைபேசி.

83. **விடை : A**

- ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக, உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொற்கள் என்கிறோம்.
- ஒரு மொழி தன் வேர்ச்சொற்களைக் கொண்டு புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.
- இவ்வாறு உருவாக்கிக் கொள்ளும்போது மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டு புதிய செழிப்பினைப் பெற்று மேலும் வளர்ச்சி பெறும்.
- எடுத்துக்காட்டாக website.blog, போன்றவை தகவல் தொழில்நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகள்.
- இவற்றிற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களாக உள்ள இணையம்.
- வலைப்பூ போன்றவை தகவல்தொழில் நுட்பக் கலைச்சொற்கள் ஆகும்.
- கலைச் சொற்கள் பெரும்பாலும் காரணப்பெயர்களாகவே இருக்கும்.

84. **விடை : D**

- PROSPECTUS – விளக்கச்சுவடி
- ANSWER BOOK – **விடைச்சுவடி**
- ROUGH NOTE BOOK – பொதுக் குறிப்புச் சுவடி
- NOTE BOOK – எழுதுசுவடி

SHANKAR IAS ACADEMY

85. **விடை : C**

(ஆங்கிலச் சொல்) (தமிழ்ச்சொல்)

- Ointment – களிம்பு
- Blog – வலைப்பூ
- Windows – பலகணி

86. **விடை : B**

- மருந்தாளுநர் – Pharmacist
- மருத்துவர் – Doctor, Physician
- ஆய்வக உதவியாளர் – Lab Assistant
- செவிலியர் – Nurse

87. **விடை : B**

- Typhoid' என்னும் நோயைக் குறிக்கும் சரியான தமிழ்ச்சொல் குடற் காய்ச்சல்

88. **விடை : D**

- ஊடுகதிர் – X – Ray
- மருத்துவமனை – Clinic
- குருதிப் ப்பிரிவு – Blood Group

89. **விடை : D**

கலைச்சொல்லாக்கப் பணியின்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

- ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
- பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.
- ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும். தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக்கூடாது.
- எடுத்துக்காட்டாக, இ–மெயில், ஸ்மார்ட்ஃபோன், விண்டோஸ் 10.80 ஆகிய ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக மின்னஞ்சல், திறன்பேசி, பலகணி 10, 8ஆம் தலைமுறை போன்ற கலைச்சொற்கள் தமிழில் உள்ளன.
- அக்கலைச் சொற்களை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். இப்பணிக்கு இதழ்களும் ஊடகங்களும் துணைநிற்க வேண்டும்.

90. **விடை : B**

- Library – நூலகம், நூல்நிலையம்
- librarian – நூலகர்
- library science – நூலக இயல்

91. **விடை : D**

- Antibiotics என்பதற்கு எதிர் உயிர்ப்பொருள், நுண்ணுயிர்க் கொல்லிகள், உயிர் எதிர் நச்சுகள், கேடுயிர்க் கொல்லிகள், நச்சுயிர்க் கொல்லிகள் எனப் பல்வேறு கலைச்சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

SHANKAR IAS ACADEMY

92. **விடை : C**

- Member' என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் "சரியான பதந்தான்; ஆனால் பொது ஜனங்களுக்குத் தெரியாது" என்று பாரதியாரால் குறிப்பிடப்பட்ட சொல் – சபிகன்

93. **விடை : B**

- 'தென் ஆப்பிரிக்காவின் பெண்கள் விடுதலை' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதத் தொடங்கிய பாரதி, Member என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லொன்றை உருவாக்க முனைந்தார்

94. **விடை : D**

(ஆங்கிலச் சொல்)		**(தமிழ்ச்சொல்)**
Search Engine	–	தேடுபொறி
Artificial Intelligence	–	செயற்கை நுண்ணறிவு
Continent	–	கண்டம்
Readymade	–	ஆயத்த ஆடை

95. **விடை : D**

- கலைச்சொற்கள்

மின்நூல்	E-Book
மின் இதழ்கள்	E-Magazine
பண்டம்	Commodity
பயணப்படகுகள்	Ferries
கடற்பயணம்	Voyage
தொழில் முனைவோர்	Entrepreneur
பாரம்பரியம்	Heritage

96. **விடை : C**

அகரவரிசை

- இசைக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை, காவியக்கலை, சிற்பக்கலை, நற்கலை.

97. **விடை : B**

- எழுத்துகள் ஒன்றோ பலவோ சேர்ந்து பொருள் தரும்போது சொல்லாகிறது. சொற்கள் பல சேர்ந்து தொடர்கள் உருவாகின்றன.
- பல சொல் சேர்ந்து வந்தாலும், பொருள் முடிவுபெற்று வந்தால் மட்டுமே அவை தொடர்கள் எனப்படும்.
- தொடருக்கும் (Sentence) சொற்றொடருக்கும் (Phrase) சிறு வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக, "வட்டமான நிலா" என்பது. ஒரு சொற்றொடர்.
- "நான் வட்டமான நிலாவைக் கண்டேன்" என்பது பொருள் முடிவுபெற்ற தொடர்.

SHANKAR IAS ACADEMY

98. **விடை : B**

- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும்.
- மேற்கண்ட நான்கு பொருள்களுள் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து தெய்வம், அரசன், வள்ளல், குரு முதலியோரின் சிறப்பினைக் கற்பனை செய்து பாடுவது சிற்றிலக்கியம். இவற்றை வடநூலார் பிரபந்தம் என்பர்.
- பிரபந்தம் என்பதற்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருள்.
- தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும்..

99. **விடை : D**

- போருக்குரிய தெய்வமாக காளியைக் கருதுவர்

100. **விடை: B**

- பரணி இலக்கியம் செயங்கொண்டாரால் இயற்றப்பட்டது.

101. **விடை : B**

- பரணி இலக்கியமானது சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது.

102. **விடை : B**

- ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற அரசனுக்காகப் பாடப்படும் இலக்கிய வகை பரணி.

103. **விடை : D**

பொருத்தமான இணைப்புச் சொல்

- தீயினால் சுடப்பட்டவர்கூட பிழைத்துக் கொள்ள முடியும் ஆனால் பெரியவர்களுக்குத் தீங்கு செய்தவர் தப்ப முடியாது.

104. **விடை : D**

பொருத்தமான இணைப்புச் சொல்

- 'மலேசியாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்று சர்ச்சில் கூறினார். அதற்கு நேதாஜி 'இந்தத் தமிழினம் தான் ஆங்கிலேயர்களை அழிக்கும்'

105. **விடை : B**

விடைக்கேற்ற வினா

- 'வ.உ.சி. சென்னைக்குச் செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்'.
- வ.உ.சி. சென்னைக்குச் செல்லும் போது யாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்?

106. **விடை : C**

பிழையற்ற தொடர்

- வேட்புமனு பதிவு செய்யப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

107. **விடை : B**

அமல், அமுல்:

- இது அரபி மொழிச் சொல்லாகும். தமிழில் 'அமுல்' என்றால் கொள்ளை யென்று பொருள்படும். எனவே 'அமல்/அமுல்' படுத்தப்படுகிறது என்பதற்குப் பதில் 'செயல்படுத்தப்படுகிறது' என்றும், 'அமலில் உள்ளது' என்பதைச் 'செயல்முறையில் உள்ளது' என்றும் கூறுவதுதான் சிறந்தது.

108. **விடை : D**

- **ரத்துசெய்**: இச்சொல்லு ககுப் பதிலாக நீக்கு', 'கைவிடு', 'தள்ளிவிடு', 'விலக்கிக்கொள்', ஆகிய தமிழ்ச் சொற்களில் ஏதாவது உரியவொன்றைப் பயன்படுத்தலாம்.

109. **விடை : B**

- 'காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.கவும் தலா மூன்று இடங்களைப் பெற்றன' (தவறு)
- 'காங்கிரஸ் கட்சியும் அ.தி.மு.க. கட்சியும் ஒவ்வொன்றும் மும்மூன்று இடங்களைப் பெற்றது' என்பதுதான் சரியானதாகும்.

110. **விடை : A**

- **பைசல் செய்யப்பட்டது**: இது 'தீர்க்கப் பட்டது', 'தீர்த்துவிடப்பட்டது', 'தீர்மானம் செய்யப்பட்டது', எனத் தமிழிலேயே சொல்வது பொருந்துமே.

111. **விடை : A**

(பிறமொழிச் சொல்)		**(தமிழ்ச்சொல்)**
பட்டுவாடா செய்	–	அளி
சகஜம்	–	இயல்பானது
மாமூல்	–	பழைய நிலை
பிரயாணி	–	பயணி

112. **விடை : D**

- எழுவாய் எப்போதும் ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல்லாக மட்டுமே வரும். இஃது உயர்திணையையும் குறிக்கும்; அஃறிணையையும் குறிக்கும்; ஒருமையாகவும், பன்மையாகவும் வரும். செயலைக் குறிக்கும் வினைச்சொல்லாக எழுவாய் வராது.
  - (எ.கா.) எட்வர்டு வந்தான்
- இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல், எட்வர்டு என்பதாகும். இந்தச் சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.
- ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு **விடை**யாக அமைவது எழுவாய்
  - (எ.கா.) நீலன் பாடத்தைப் படித்தான்.
    பாரி யார்?
    புலி ஒரு விலங்கு.
- இத்தொடர்களில் நீலன், பாரி, புலி ஆகியன எழுவாய்கள்.

113. **விடை : A**

- நீலன் பாடத்தைப் படித்தான்' – இத்தொடரில் அமைந்துள்ள எழுவாய் நீலன்

SHANKAR IAS ACADEMY

114. **விடை : C**

- "பாடம் படி" இந்தத் தொடரில் செயலைச் செய்வது யார்? என்னும் வினாவை எழுப்பும்போது பாடம் படி என்பதில் நீ என்னும் எழுவாய் மறைந்து வந்துள்ளது. எனவே இங்கு 'நீ' என்பது தோன்றா எழுவாய் ஆகும்.

115. **விடை : B**

பயனிலை

- ஒரு தொடரில் என்ன செயல் நிகழ்கிறது எனக் கேள்வி கேட்கப்படும்போது அதற்கான **விடை**யாக அமைவது பயனிலை. பயனிலை வினைச் சொல்லாக அமையும். பயனிலையை மூவகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு.
- ஒரு தொடரை வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது பயனிலை.
  - கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.
  - கரிகாலன் யார்?

116. **விடை : A**

செயப்படுபொருள்

- ஒரு தொடரில் எதை, யாரை. எதனை, எவற்றை எனக் கேட்கப்படும் வினாவுக்கு **விடை**யாக வரும் சொல்லே செயப்படுபொருள் ஆகும். செயப்படுபொருள் என்பது எழுவாயினால் செய்யப்படுகின்ற பொருளாகும். இ◌ஃது இரண்டாம் வேற்றுமை உருபினை ஏற்று வரும். சில தொடர்களில் செயப்படுபொருள் இல்லாமலும் வரும்.
- யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு **விடை**யாக வருவது செயப்படுபொருள்.
  - (எ.கா.) நான் கவிதையைப் படித்தேன்.
    என் புத்தகத்தை எடுத்தது யார்?
    நெல்லிக்கனியைத் தந்தவர் அதியமான்.
    மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்.
- இத்தொடர்களில் கவிதை, புத்தகம், நெல்லிக்கனி, கனகாம்பரம் ஆகியன செயப்படு பொருள்கள்.

117. **விடை : A**

- **நான் வந்தேன்.**
  - இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது. இது வினைப் பயனிலை எனப்படும்.
- **சொன்னவள் கலா.**
  - இங்கு கலா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப் பயனிலை எனப்படும்.
- **விளையாடுபவன் யார்?**
  - இங்கு யார் என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப் பயனிலை எனப்படும்.

118. **விடை : B**

- செயப்படுபொருள் பொதுவாக இரண்டாம் வேற்றுமை உருபினை ஏற்று வரும்.

SHANKAR IAS ACADEMY

119. **விடை : B**

குயவன் பானை வனைந்தான்

- இத்தொடரில் குயவன் – எழுவாய், பானை – செயப்படுபொருள், வனைந்தான் – பயனிலை எதனைச் செய்தான் என்னும் வினாவிற்குப் பானை என்னும் சொல் **விடை**யாகக் கிடைக்கிறது.
- இவ்வாறு செயப்படுபொருள் பெற்றுவரும் வினைச் சொற்களைச் "செயப்படுபொருள் குன்றா வினை" என அழைப்பர்.

120. **விடை : C**

- மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார்.
- 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

121. **விடை : B**

- "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.
- 'ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவுகொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாதர்.

122. **விடை : A**

- "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்" என்னும் குறிப்பு சின்னமனூர்ச் செப்பேட்டில் இடம் பெற்றுள்ளது.

123. **விடை : C**

பாரதியின் மொழிபெயர்ப்பு

- Exhibition – காட்சி, பொருட்காட்சி
- East Indian Railways – இருப்புப் பாதை
- Revolution – புரட்சி
- Strike – தொழில் நிறுத்தி இருத்தல், தொழில் நிறுத்தம், வேலை நிறுத்தம்

124. **விடை : B**

- ராகுல் சாங்கிருத்யாயன் 1942ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார்.
- 1949ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.
- 2016 – டாக்டர் என். ஸ்ரீதர் மொழி பெயர்ப்பு, 2016 – முத்து மீனாட்சி மொழி பெயர்ப்பு, 2018 – யூமா வாசுகி மொழி பெயர்ப்பு – சா.கந்தசாமி

SHANKAR IAS ACADEMY

125. **விடை : C**

- அகரவரிசை
- அஃது, அக்கா, அப்பா, அம்மா, அன்பு

126. **விடை : A**

- தருகின்றனர்' – என்பதன் வேர்ச்சொல் தா

127. **விடை : A**

அகரவரிசை

- தகடு, தகழி, தடாகம், தந்தை, தமிழ், தருப்பை

128. **விடை : A**

ஊர்ப் பெயர்களின் மரூஉ

- மயிலாடுதுறை – மயூரம்/மாயூரம்
- நாகர்கோவில் – நாஞ்சி
- புதுச்சேரி – புதுவை
- கும்பகோணம் – குடந்தை

129. **விடை : A**

ஊர்ப் பெயர்களின் மரூஉ

- மணப்பாறை – மணவை
- இராமநாதபுரம் – முகவை
- சங்கரன்கோவில் – சங்கை
- திருத்தணி – தணிகை

130. **விடை : D**

ஊர்ப் பெயர்களின் மரூஉ

- கொடைக்கானல் – கோடை
- இராமநாதபுரம் – முகவை
- விருதுநகர் – விருதை
- சோழிங்கநல்லூர் – சோளிங்கர்

131. **விடை : C**

- கருந்தட்டைக்குடி – கரந்தை
- கரிவலம் வந்தநல்லூர் – கருவை
- கருவூர் – கரூர்

132. **விடை : A**

ஊர்ப் பெயர்களின் மரூஉ

- நாம் எல்லாச் சொற்களையும் எல்லா இடங்களிலும் முழுமையான வடிவத்தில் பயன்படுத்துவது இல்லை.

SHANKAR IAS ACADEMY

- தஞ்சாவூர் என்னும் பெயரைத் தஞ்சை என்றும், திருநெல்வேலி என்னும் பெயரை நெல்லை எனவும் வழங்குகிறோம்.
- இவ்வாறு இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்
- ஆற்றூர் – ஆத்தூர்

133. **விடை : B**
- சங்கரன்கோவில் – சங்கை

134. **விடை : A**
- சிங்காநல்லூர் – சிங்கை
- சிங்களாந்தபுரம் – சிங்கை

135. **விடை : D**
- பரமக்குடி – பரம்பை
- சேந்தமங்கலம் – சேந்தை
- ஸ்ரீவைகுண்டம் – ஸ்ரீவை

136. **விடை : C**
- தமிழில் சொல் என்பதற்கு **நெல்** என்பது ஒரு பொருள். **சொன்றி, சோறு** என்பவை அவ்வழியில் வந்தவை. நெல்லில் பதர் உண்டு. சொல்
- ஆனால் சொல்லில் பதர் இருத்தலாகாது. **எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே** என்பது **தொல்காப்பியர்** கூற்று.

137. **விடை : C**
- ஓர் எழுத்து மொழி எவை எனின், **நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி** என்பார் தொல்காப்பியர்.
- குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை என்பதைக் **குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே** என்பார்.

138. **விடை : B**
- குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை என்பதைக் **குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே** என்பார்.

139. **விடை : A**
- காட்டுப் பசுவுக்கு 'ஆமா' என்று பெயர்
- அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நிற்கின்றது.

140. **விடை : B**
- **ஈ, பூ, கை** ஆகிய எழுத்துகளைக் கவனியுங்கள்.
- இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

SHANKAR IAS ACADEMY

- **நன்னூல்** என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.
- இவற்றில் **நொ, து** ஆகிய இரண்டு சொற்களைத்தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

141. **விடை : C**

ஓ	மதகுநீர் தாங்கும் பலகை
கா	சோலை
ஏ	அம்பு
ஐ	தலைவன்

142. **விடை : C**

- கா – சோலை
- கூ – பூமி
- கை – ஒழுக்கம்
- கோ – அரசன்

143. **விடை : A**

நே, மே	அன்பு, நேசம்
நை	இழிவு
நோ	வறுமை
மா	மாமரம்

144. **விடை : B**

- பே – மேகம்
- சோ – மதில்
- கா – சோலை
- சே – உயர்வு

145. **விடை : D**

- நை – இழிவு
- ஊ – இறைச்சி
- மை – அஞ்சனம்
- பே – மேகம்

146. **விடை : A**

அ எழுத்தின் பொருள்:

- எட்டு
- அழகு
- சிவன்
- திருமால்

SHANKAR IAS ACADEMY

- நான்முகன்
- சுட்டு
- அசை
- திப்பிலி
- 8 என்ற எண் வடிவம்
- சேய்மை

147. **விடை : B**

- ஒள – பாம்பு, நிலம், விழித்தல், அழைத்தல்
- ஊ – தசை, உண்ணல், சந்திரன், சிவன்
- ஓ – உயர்வு, கொன்றை, இழிவு, நினைவு
- ஏ – இறுமாப்பு, விளிக்குறிப்பு, செலுத்துதல், வினா

148. **விடை : C**

<u>ஒள எழுத்தின் பொருள்:</u>

- பாம்பு
- நிலம்
- விழித்தல்
- அழைத்தல்
- வியப்பு
- தடை
- கடிதல்
- பூமி
- ஆனந்தம்

149. **விடை : D**

- சூ – வானவகை
- சை – கைப்பொருள்
- கூ – பிசாசு
- கு – பூமி
- கௌ – தீங்கு

150. **விடை : C**

- கோ எழுத்தின் பொருள்: அரசன், இடியேறு, தேவலோகம்,
- கோ எழுத்தின் பொருள்: சதுரம்

151. **விடை : C**

- கோ – மேன்மை, வெளிச்சம், தகப்பன்

152. **விடை : D**

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு

SHANKAR IAS ACADEMY

பொருள்:

- நீர் இல்லாமல் எத்தகையோருக்கும் உலக வாழ்க்கை அமையாது என்றால், மழை இல்லாமல் ஒழுக்கமும் நிலைபெறாது

153. **விடை : C**

- வையகம் – உலகம், ஞாலம், பார்
- ஆழி – மோதிரம்

154. **விடை : D**

- சிறை – இறகு
- பூதலம் – பூமி
- கொடை – உழுபடை
- சமர் – கலாம்
- உரு – அழகு

155. **விடை : A**

- காமுறுவர் – விரும்புவர்
- மதோன்மத்தர் – பெரும்பித்தனாகிய சிவபெருமான்
- கடறு – காடு
- பரி – குதிரை

156. **விடை : B**

- ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவே இருக்கும் மணல்திட்டு) – துருத்தி

157. **விடை : C**

- ஒருபக்கச் சார்பு (நடுவுநிலைமையில் இருந்து மாறுதல்) – பால்பற்றி

158. **விடை : C**

- மின்னாள் – ஒளிரமாட்டாள்

159. **விடை : C**

- தெற்கில் உள்ள திருவாரூர் – தென்கமலை
- கோளி – அரசமரம்
- பகடு – எருமைக்கிடா
- வசி – மழை
- சுரிவளை – சங்கு

160. **விடை : D**

- தமிழ்மொழிதான் மிகப் பழமையான மொழி. **எனவே**, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்

SHANKAR IAS ACADEMY

161. **விடை : C**

- காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர். **ஏனெனில்** அவர் எளிமையை விரும்பியவர்.

162. **விடை : D**

- தீயினால் சுட்டபுண் ஆறிவிடும் **ஆனால்** கடுஞ்சொல்லால் ஏற்படும் காயம் ஆறாது.
- தனக்கான ஆற்றலைச் சேகரித்து வைக்க மூளைக்குள் இடமே இல்லை. **அதனால்** அதற்குக் குருதியோட்டம் எப்போதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.
- நான் உயிரைக் கொடுப்பதற்கும் கொஞ்சமும் கவலைப்படவில்லை **ஏனெனில்** நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை

163. **விடை : A**

- எமது மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. **ஏனெனில்** இதுவே எமக்குத் தாயாகும்.
- நான் ஏற்கனவே சென்ற இடம்தான். **ஆதலால்** அச்சம் ஒன்றும் இல்லை
- நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். **இல்லையென்றால்** துன்பப்பட்ட வேண்டும்

164. **விடை : A**

வழக்கு:

- எழுத்திலும் **பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை** வழக்கு எனப்படும். நம் முன்னோர் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.
- **இயல்பு வழக்கு, தகுதி வழக்கு** என வழக்கு **இரு**வகைப்படும்

இயல்பு வழக்கு

- ஒரு பொருளை அதற்கே உரிய **இயல்பான சொற்களால் குறிப்பிடுவது** இயல்பு வழக்கு ஆகும். இயல்பு வழக்கு **மூன்று** வகைப்படும்.
  1. இலக்கணமுடையது
  2. இலக்கணப்போலி
  3. மரூஉ

165. **விடை : D**

இலக்கணமுடையது:

- நிலம், மரம், வான், எழுது – ஆகிய சொற்கள் தமக்குரிய பொருளை எவ்வகை மாறுபாடும் இல்லாமல் இயல்பாகத் தருகின்றன. இவ்வாறு **இலக்கண நெறி மாறாமல் முறையாக அமைந்த சொல்** இலக்கணமுடையது ஆகும்.

166. **விடை : B**

மரூஉ:

- நாம் எல்லாச் சொற்களையும் எல்லா இடங்களிலும் முழுமையான வடிவத்தில் பயன்படுத்துவது இல்லை. தஞ்சாவூர் என்னும் பெயரைத் தஞ்சை என்றும், திருநெல்வேலி என்னும் பெயரை நெல்லை எனவும் வழங்குகிறோம். இவ்வாறு இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.

SHANKAR IAS ACADEMY

- (எ.கா) – கோவை, குடந்தை, எந்தை, போது, சோணாடு

167. **விடை : D**

வாயில் - வாசல்

- **இல்லத்துக்குள் நுழையும் வழி இல்வாய் (இல்லத்தின் வாய்) எனக் குறிப்பிடப்பட வேண்டும்.**
- **ஆனால் அதனை வாயில் என வழங்குகிறோம்.**
- **இது இலக்கணப் போலியாகும்.**
- **வாயில் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் வாசல் என வழங்குகிறோம்.**
- **இது மரூஉ ஆகும்.**

168. **விடை : B**

- தரைப் படை, கப்பல் படை, விமானப் படை - முப்படை

169. **விடை : D**

- **நால்வகை உணவு** : உண்ணல், தின்னல், பருகல், நக்கல்

170. **விடை : A**

- **பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) :**
  1) கழங்கு
  2) அம்மானை
  3) ஊசல்

171. **விடை : C**

- **நாற்குணம்:**
  1) அச்சம்
  2) நாணம்
  3) மடம்
  4) பயிர்ப்பு

172. **விடை : B**

- **ஏழு பருவ பெண்கள்:**
  1) பேதை
  2) பெதும்பை,
  3) மங்கை
  4) மடந்தை
  5) அரிவை,
  6) தெரிவை
  7) பேரிளம்பெண்

SHANKAR IAS ACADEMY

173. **விடை : B**

- திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டவர் மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் ஆவார்
- 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' என்று திருக்குறளைப் போற்றிப் புகழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார்.

174. **விடை : A**

- வனப்பு, எழில், சுந்தரம், வடிவு - திரு

175. **விடை : C**

- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர் திருவள்ளுவர்.

176. **விடை : B**

- திருக்குறளின் 'இன்பத்துப்பால்' களவியல் **(07)**, கற்பியல் **(18)** என மொத்தம் 25 அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

177. **விடை : D**

"என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் – குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்" – இறையனார்.

178. **விடை : A**

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

- **பொருள் :** எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை ஆகும். ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது, அதனை விரும்பிக் காத்தல்வேண்டும்

179. **விடை : D**

- உறைகிறியார் – ஆற்றல் இல்லாதவர்கள்

180. **விடை : B**

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

- **பொருள் :** ஒரு செயலைச் செய்யும் போது அச் செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல், ஒரு யானையால் மற்றொரு யானையைப் பிடித்தலைப் போன்றது.

SHANKAR IAS ACADEMY

181. **விடை : A**

செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

- **பொருள் :** ஒரு செயலைச் செய்வதற்குரிய செயல்முறையாவது, அதனை முன்பே செய்து முடித்துத் தெளிந்தவனிடம் கேட்டறிந்து, அவைகளைத் தாமும் மேற்கொள்ளுதல் ஆகும்.

182. **விடை : C**

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

- **பொருள் :** உலகத்தாரோடு பொருந்தி ஒழுகும் தன்மையை அறியாதவர், பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவர்

183. **விடை : D**

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

- **பொருள் :** பிறர் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்ளாமல் தண்டிப்பவரைச் சான்றோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்; ஆனால், பொறுத்துக் கொள்பவரைப் பொன்போல் மதித்து மனத்துள் வைத்துக்கொள்வர்.

184. **விடை : A**

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

- **பொருள் :** வரம்புகடந்து பேசுவோரின் தீய சொற்களையும் பொறுத்துக்கொள்பவரே பற்றற்ற துறவியரினும் மேலானவர்.

185. **விடை : B**

- வெள்ளந்தனைய மலர்நீட்டம் – ஊக்கத்தின் அளவுக்கேற்ப உயர்வு
- புதை அம்பின் பட்டுப்பாடு உளன்னும் களிறு – அழிவு வந்தபோதும் தளராத ஊக்கமுடையோர்
- மோப்பக் குழையும் அனிச்சம் – முகவேறுபாட்டைக் கண்டே வாடும் விருத்தினர்
- மரம்மக்கள் ஆதலே வேறு – ஊக்கம் இல்லாதவர்

186. **விடை : C**

இனைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

- **பொருள் :** விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்ன அளவினது என்று கூறத்தக்கது அன்று; அது விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினது

187. **விடை : C**

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

SHANKAR IAS ACADEMY

➢ **பொருள் :** விருந்தினரை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை, வறுமையுள் கொடிய வறுமையாகும். அதுபோல, அறிவற்றார் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக்கொள்ளுதல் வலிமையுள் சிறந்த வலிமையாகும்.

188. **விடை : D**

➢ மிச்சில் – எஞ்சிய உணவு

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

➢ **பொருள் :** விருந்தினரைப் போற்றியபின், எஞ்சியதைத் தான் உண்ணுகிறவனுடைய நிலத்தில், விதையும் விதைக்க வேண்டுமோ?

189. **விடை : A**

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

➢ **பொருள் :** தளராத ஊக்கம் உடையவர்களிடத்திலே, ஆக்கம், தானே அவரிருக்கும் இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சென்று, அவரிடம் நிலையாகச் சேர்ந்திருக்கும்.

உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.

➢ **பொருள் :** ஊக்கம் உடைமையே ஒருவனது நிலையான செல்வம் ஆகும்; மற்றைய செல்வங்கள் எல்லாம் நிலைத்திருக்காமல் ஒரு காலத்தில் நீங்கியும் போய்விடும்.

190. **விடை : C**

➢ சிவிகை – பல்லக்கு

அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

➢ **பொருள் :** பல்லக்கை சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இ.ந்து என்று கூறவேண்டா.

191. **விடை : B**

வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

➢ **பொருள் :** வறுமையானவர்க்கு ஒரு பொருளைத் தந்து உதவுவதே ஈகை; பிறருக்குத் தருவது எல்லாம் எதிர்ப்பயனை எதிர்பார்த்துத் தருவது ஆகும்

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

➢ **பொருள் :** பசியைப் பொறுத்துக் கொள்பவரது ஆற்றலே சிறந்த ஆற்றலாகும்; அதுவும் அப்பசி நோயை உணவளித்து மாற்றுவாரின் ஈகைக்குப் பிற்பட்டதே ஆகும்

SHANKAR IAS ACADEMY

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

➢ **பொருள் :** உதவியை நாடி வந்து இரந்தவருடைய மகிழ்ச்சியான முகத்தைக் காணும் வரைக்கும், இரந்து கேட்கப்படுதலும் ஈகையாளனுக்குத் துன்பம் தருவதேயாகும்.

192. **விடை : B**

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

➢ **பொருள் :** பசியைப் பொறுத்துக் கொள்பவரது ஆற்றலே சிறந்த ஆற்றலாகும்; அதுவும் அப்பசி நோயை உணவளித்து மாற்றுவாரின் ஈகைக்குப் பிற்பட்டதே ஆகும்.

193. **விடை : A**

ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர்

➢ **பொருள் :** தாம் சேர்த்துள்ள செல்வத்தைக் காப்பாற்றி வைத்துப் பின் இழந்துவிடும் கல்நெஞ்சர்கள், பிறருக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியமாட்டார்களோ?

194. **விடை : B**

சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

➢ **பொருள் :** சாதலைக் காட்டிலும் துன்பமானது யாதுமே இல்லை; பிறருக்குக் கொடுத்து உதவ நினையாத கடைப்பட்டவனைப் பொறுத்தமட்டில் அப்படிச் சாதலும் இனியதே ஆகும் - இதுவே இக்குறள் உணர்த்தும் வாழ்வியல் உண்மை.

195. **விடை : D**

அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

➢ **பொருள் :** பின் காலத்தில் பார்ப்போம்' என்று தள்ளி வைக்காமல், அறத்தை அன்றே செய்க; அது இறக்கும் காலத்திலே அழியாத துணையாகும்

196. **விடை : B**

➢ உயிர் வரின் ஒரு, இரு முறையே ஓர், ஈர் என்று மாறும்.

197. **விடை : B**

➢ உயிர் வரின் அது, இது, எது முறையே அஃது, இஃது, எஃது என்பதாக மாறும்.

பிழை	சரி
ஓர் மாவட்டம்	ஒரு மாவட்டம்
ஒரு அமைச்சர்	ஓர் அமைச்சர்

SHANKAR IAS ACADEMY

198. **விடை : C**

- ஒன்று என்பதைக் குறிக்க **ஓர், ஒரு** ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன.
- உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.
- உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.
  - (எ.கா.) ஓர் ஏரி

199. **விடை : B**

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

- **பொருள் :** கற்றவர்களுள் கற்றவர்' என்று புகழப்படுகின்றவர்கள், கற்றவர் அவையின் முன், தாம் கற்றதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு எடுத்துச் சொல்லக் கூடியவர்களே ஆவர்.

200. **விடை : D**

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல்.

- **பொருள் :** பகைவர் நடுவே புகுந்த, பேடியின் கையிலேயுள்ள கூர்மையான வாள் பயன்படாததைப் போல, அவையில் பேசுவதற்கு அஞ்சுகிறவன் நூலறிவும் பயன்படாது.

* * * * * *

SHANKAR IAS ACADEMY